பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 07 2025 7 15

புதன்கிழமை இரவு

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வினை முடித்துக் கொண்டு வெற்றிகரமாக பூமிக்கு திரும்பிய இந்தியாவின் சுபான்சு சுக்லாவுக்கு மத்திய அமைச்சரவை பாராட்டு தெரிவித்துள்ளது.

- விவசாயிகளின் நலனுக்காக வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

- நிதி சேவைகளுக்கான சிறப்பு இயக்கத்தின் கீழ் கடந்த 2 வாரங்களில் மட்டும் 1 லட்சத்து 40 ஆயிரம் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- பீகாரில் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

- ஆசியக் கோப்பை மகளிர் கூடைப்பந்து போட்டியில் இந்தியா அரையிறுதிக்கான பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்-

சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வினை முடித்துக் கொண்டு வெற்றிகரமாக பூமிக்கு திரும்பிய இந்தியாவின் சுபான்சு சுக்லாவுக்கு மத்திய அமைச்சரவை பாராட்டு தெரிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் சுபான்சு சுக்லாவின் இந்த பயணம் இந்தியா சர்வதேச விண்வெளி மையத்தை ஏற்படுத்துவதற்கு கூடுதல் உத்வேகம் அளித்துள்ளது என்று குறிப்பிட்டார்.

இதற்காக இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு அந்த தீர்மானத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

விண்வெளி ஆய்வுகளில் இந்தியாவின் வெற்றிப் பயணத்தில் மேலும் ஒரு சாதனையாக சுபான்சு சுக்லாவின் பயணம் அமைந்துள்ளதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>><><><><<

விவசாயிகளின் நலனுக்காக வரலாற்றுச் சிறப்புமிக்க் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் நாடுமுழுவதும் 100 மாவட்டங்களில் இந்த தொலைநோக்கு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், பாசன வசதிகளை மேம்படுத்துவதற்கும், அறுவடைக்கு பிந்தைய பயிர் சேமிப்புக்கான கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதற்கும், விவசாயிகள் கடன் பெறுவதை உறுதி செய்யும் நோக்கிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அடுத்த 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படவுள்ள இந்த திட்டம், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவும், மத்திய அமைச்சரவையின் முடிவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், 11 அமைச்சகங்களின் 36 திட்டங்களை ஒருங்கிணைத்து இது செயல்படுத்தப்படவுள்ளதாக கூறியுள்ளார்.

இதன் மூலம் கிராமங்கள் வளம் பெறும் என்றும், திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>><><><<

நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிதி சேவைகளுக்கான சிறப்பு இயக்கத்தின் கீழ் கடந்த 2 வாரங்களில் மட்டும் 1 லட்சத்து 40 ஆயிரம் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஒன்றாம் தேதி தொடங்கிய இந்த இயக்கம் 3 மாதத்திற்கு நடைபெறவுள்ளதாக நிதியமைச்சகத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மத்திய அரசின் திட்டங்கள் தகுதிவாய்ந்த அனைவருக்கும் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த சிறப்பு இயக்கம் நடத்தப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தின் மூலம் இதுவரை 43 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

70 ஆயிரம் கிராம பஞ்சாயத்துக்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இந்த முகாம்கள் நடத்தப்படவுள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><<

இந்தியா – அர்ஜென்டினா இடையே வேளாண் ஒத்துழைப்புக்கான பணிக்குழு கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது.

இருநாடுகளின் வேளாண் துறை செயலர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

வேளாண் துறையில் கூடுதல் ஒத்துழைப்புக்கு இதுபோன்ற கூட்டங்கள் உதவிடும் என்று இந்தியா சார்பில் தெரிவிக்கப்பட்டது.

வேளாண் துறையின் வளர்ச்சிக்கான அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

பீகாரில் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

20 மாவட்டங்கள் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பலத்த காற்று வீசியதன் காரணமாக பல இடங்களில் மரங்கள் சரிந்து விழுந்ததாகவும், தாழ்வான பகுதிகள் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆறுகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடும் என்று மத்திய நீர்வள ஆணையமும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையே, கேரளா, கர்நாடகா மற்றும் தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 6 முதல் 7 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>><><><<

நாட்டின் சுதந்திர தினம் அடுத்த மாதம் 15-ஆம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி, பாதுகாப்பு அமைச்சகம் பல்வேறு போட்டிகளை நடத்தி வருகிறது.

குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இதர வயதினருக்காக கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய போட்டிகள், வரும் 31-ஆம் தேதி வரை நடைபெறுகின்றன.

பல்வேறு தலைப்புகளின் கீழ் mygov.in என்ற இணையதளத்தில் ஆன் லைன் வினாடி – வினா போட்டி நடைபெறுகிறது.

இந்த போட்டி 20 கேள்விகளுக்கு ஐந்து நிமிடங்களில் பதில் அளிக்கும் வகையில் ஆங்கிலம் மற்றும் இந்தியில் நடத்தப்படுகிறது.

இதில் வெற்றிபெறுபவர்களுக்கு முதல் பரிசாக 25 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக 15 ஆயிரம ரூபாய், மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாய் மற்றும் ஏழு பேருக்கு ஆறுதல் பரிசாக தலா ஐந்தாயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வினாடி – வினா போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

இதில் பங்கேற்க விரும்புவோர் ஒரு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ளலாம் என்றும், இதற்காக தங்களது தொலைபேசி எண் மற்றும் இ-மெயில் முகவரியை பதிவு செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“ஆபரேஷன் சிந்தூர் பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் சீரமைக்கப்பட்ட கொள்கை” என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும், “புதிய இந்தியா – அதிகாரம் பெற்ற இந்தியா” என்ற தலைப்பில் ஓவியப்போட்டியும் நடத்தப்படுவதாகவும் இதில் வெற்றிபெறும் முதல் மூன்று பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு சென்று அங்கிருந்தவாறே சமூக வலைதளங்களில் ரீல்ஸ் பதிவிடும் போட்டியும் நடைபெறுகிறது.

முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் mygov.in என்ற இணையதளத்தில் இதுகுறித்த கூடுதல் தகவல்களை தெரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டிகளில் தேர்வு பெற்ற முதல் 200 பேருக்கு புதுதில்லியில் நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படும் என்றும் அவர்கள் தங்களுடன் ஒருவரை அழைத்துச் செல்லலாம் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

>><><><<

ஜம்மு கஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்க வகை செய்யும் மசோதாவை நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடரிலேயே மத்திய அரசு கொண்டு வர வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல் காந்தி ஆகியோர் கூட்டாக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

ஜம்மு கஷ்மீர் மக்கள் கடந்த ஐந்தாண்டுகளாக இக்கோரிக்கையை வலியுறுத்தி வருவதாகவும் அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

>><><><<

சிக்கிம் மாநிலத்தில் இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உரிய வீட்டு வசதியை ஏற்படுத்தி தருமாறு தொழில் நிறுவனங்களை அம்மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, அம்மாநில தொழிலாளர் நலத்துறை செயலர் திரு Bhimthatal தொழில் நிறுவனங்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்த தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றை சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

>><><><<

புதுச்சேரி தேசிய தொழில்நுட்ப ஆட்சிமன்றக்குழு தலைவராக பேராசிரியர் கோட்டா ஹரிநாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் வாரணாசியில் உள்ள தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இந்து பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றக் குழு தலைவராகவும் அவர் பணியாற்றி வருகிறார்.

>><><><<

விளையாட்டுச் செய்திகள்

ஆசியக் கோப்பை மகளிர் கூடைப்பந்து போட்டியில் இந்தியா அரையிறுதிக்கான பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சீனாவின் Shenzhen-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் இன்றைய லீக் ஆட்டத்தில் இந்தியா 78-55 என்ற புள்ளிக் கணக்கில் Tahita-ஐ வென்றது.

-----------

ஆசிய ஜூனியர் ஜூடோ போட்டியில் இந்தியா 5 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

-------------

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அனுபமா Upadhyaya காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் 21-15, 18-21, 21-18 என்ற செட்கணக்கில் ரக்ஷிதா ஸ்ரீ சந்தோஷ் ராம்ராஜை வென்றார்.

-----------

பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டிகள் இன்று ஜெர்மனியின் Rhine Ruhr – ல் தொடங்கின.

150 நாடுகளை சேர்ந்த 9 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

ஜெர்மனியின் 6 நகரங்களில் 18 பிரிவுகளின் கீழ் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தியாவின் சார்பில் 60 க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களைச் சேர்ந்தோர் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

---------------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி சவுதாம்டனில் தற்போது நடைபெற்று வருகிறது.

இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பேட் செய்து வருகிறது.

>> End of News <<